முருகப்பெருமான் துணை

**மகான் சண்டேஸ்வரர் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.07.2022**, வியாழக்கிழமை

1. வள்ளலாய் வாழுகின்ற ஞானியே
வரம்பல தந்தருளும் தவசியே
இல்லாமை எனும் நிலையை மாற்றி
எல்லா வளமும் தரவந்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன்பெருமை கூறியே
நாட்டிடுவேன் அருளாசி தன்னை
நன்மைபட சுபகிருது நள்ளி திங்கள்
3. திங்களிலே பஞ்சதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 05 நாள், 21.07.2022 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு சண்டேஸ்வர நாயனார் யானும்
ஓங்காரன் பெருமை உலகறிய உரைப்பேன்
ஓதிடுவேன் அரங்கன் பெருமை உலகமக்கள் அறிய
4. அறியவே ஓங்கார குடிலை நோக்கி
அகிலத்தார் ஒன்றிணைந்து வருதல் வேண்டும்
அரியோடு ஈசன் பிரம்மனின் ஆசியையும்
அடைதல் வேண்டுமாயின் கலியுக மக்கள்
5. மக்களெல்லாம் தொடர்ந்து குடிலுக்கு வந்து
மகத்துவம் மிக்க ஞானிகள் பூஜையில்
தேக்கமின்றி கலந்து வருதலுற
தொடர்ந்து வழிபாடு செய்தலுற
6. செய்யவே சித்திகள் அடையும் வண்ணம்
சூட்சுமங்கள் நிறைய வரமாகக் கிட்டி
ஐயமற மனத்தெளிவு திடம்
ஆரோக்கியம் ஆயுள் கீர்த்தி பலம்
7. பலமான இல்லறமும் புத்திர வரமும்
பழுதில்லா மித்திர சகாயம் நல்திடமும்
வளமுற அருள் பொருள் வளங்களும்
வந்தடைந்து உலகோர் அரங்கன் வழிகாட்டலில்
8. வழிகாட்டலில் உலகமதும் மாறும்
வணங்குவோர்க்கு ஞான பலம் கூடும்
அழியாமை எனும் சக்திபலம் கூடி
அரங்கனால் அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு
9. வாய்ப்பு கிட்டி கலியுகத்தில் மாற்றம்
வந்தடையும் ஞானிகள் ஆட்சி காலமாகும்
மெய்யுடனே அரங்கமகான் தரும்
மேலான தர்ம வழிகளை பின்பற்றி

10. பின்பற்றி உலகமெல்லாம் தர்மம்
பெருமளவில் அன்னதானமாக நடந்திட
இன்பமுற தர்மம் தலைத்தோங்கி
எல்லோருக்கும் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகி

11. ஆகியே கலியுகம் மாற்றம் காணும்
அற்புதமான அரங்கன் சேவைவழி மக்களெல்லாம்
மகிழவே முருகப்பெருமானை முன்மொழிந்து
மனிதர்கள் ஆட்சி முடிவுற மகான்கள் ஆட்சி துவங்கிடும்
அருளாசி முற்றே

–சுபம்–